சீதாவகபுர நகர சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சீதாவகபுர நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுகள் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181(1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் 10(1) ஆம் உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து சீதாவகபுர நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

	உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.7 மற்றும் 3.9(அ) ஆம் பந்திகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிகூற்று தொகுதியில் பாதீட்டுத் தவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை	2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். .	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.26 ஆம் பந்திக்கு முரணாக 06 மாதங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட ரூபா 31,580,995 ஆன நிலையான வைப்புக்களானது காசுப் பாய்ச்சல் கூற்றில் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான காசும் பகாசுக்குச் சமனானவைகளில் உள்ளடக்கப்பட்டிருந்ததன் காரணமாக அதற்கு சமமான பெறுமதியால் காசுப் பாய்ச்சல் கூற்றில் ஆண்டின் இறுதியில்	-மேற்படி-	-மேற்படி-

	உள்ள காசும் காசுக்குச் சமமானவைகளும் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.		
(இ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.30 ஆம் பந்தியின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டின் போது பெற்ற மூலதனச் செலவுகளுக்கான மானியம் ரூபா 24,021,015 காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளின் கீழ் காசு உட்பாய்ச்சலாக செம்மையாக்கப்படாமையின் காரணமாக நிதிச் செயற்பாடுகளிலிருந்து தோன்றிய தேறிய காசுப் பாய்ச்சல் மேற்கூறிய பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.	2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரிசெயவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். .	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.
(ஈ)	நியமத்தின் 4 ஆம் அத்தியாயத்தின் 4.14 ஆம் பந்தியின் பிரகாரம் சபையினால் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரிசெய்யப்பட்ட ரூபா 67,289,722 ஆன முன்னைய காலப்பகுதிக்கான பிழைகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.
(உ)	நியமத்தின் 6 அத்தியாயத்தின் 6.13 ஆம் பந்தீன் பிரகாரம் ஒரு சொத்தினைப் பயன்படுத்துவதற்காக பெற்றுக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பததிலிருந்து அதற்கு பெறுமானத் தேய்வு செய்தல் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணான பெறுமானத் தேய்வுக் கொள்கை நகர சபையின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இதற்கிணங்க 2024 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த ரூபா 56,140,367 தொகையான 08 விடயங்களின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள'	2020 ஆம் ஆண்டிலிருந்து இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல் தொடர்பான பயிற்சி செயலமர்வின் போது கொள்வனவு செய்த ஆண்டில் பெறுமானத் தேய்வு செய்யாமலிருப்பதற்கும் கைதவிர்ப்புச் செய்யும் சந்தர்ப்பம் முழு ஆண்டிற்குமாக பெறுமானத் தேய்வு செய்வதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது எனவும் உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது	-மேற்படி-

மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருக்காததுடன் அந்த சொத்துக்களுக்குரிய வருடாந்த பெறுமாதன் தேய்வு ரூபா 905,281 ஆகும்.	எனவும் அதற்கிணங்க 2020 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை பெறுமானத் தேய்வு கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	நகர சபையின் முன்னைய ஆண்டுகள் மற்றும் நடைமுறை ஆண்டு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு பிழைகளை சரிசெய்வதற்கு மத்தியில் 2024 ஆம் ஆண்டின் போது பாலங்கள், மதகுகள், வீதிகளுக்காக செலுத்தப்பட்ட ரூபா 2,553,210 பெறுமதியானது பாலங்கள், மதகுகள், வீதிகள் கணக்கிற்கும் திரண்ட நிதியத்திற்கும் செம்மையாக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்காததனால் ஆதனம், பொறி மற்றும் மற்றும் உபகரணங்களும் திரண்ட நிதியும் அப்பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.	2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்குகள் சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	மூலதன மானிய பேரேட்டுக் கணக்கின் இறுதி மீதி ரூபா 105,030,413 பெறுமதியானது விபரமான வருமானத்தின் கீழ் செம்மையாக்கப்பட்டிருந்தது. உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் 2.5 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு நிறுவனம் அதன் நிதிக்கூற்றுக்களை அட்டுறு அடிப்படையிலான கணக்கீட்டினைப் பயன்படுத்தி தயாரித்தல் வேண்டும். அதற்கிணங்க அட்டுறு அடிப்படை தொடர்பாக ஆண்டிற்கான மூலதன மானியத்தின் பெறுமதி ரூபா 49,403,108 தொகை ஏனைய விபரமான வருமானத்தின் கீழ் செம்மையாக்கப்படாததன் காரணமாக முழு விபரமான வருமானம் ரூபா 55,627,305 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்குகள் சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும்.

1.6.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நகர சபையின் மிகை பற்றாக்குறை கணக்கின் மீதி ரூபா 50,337,772 ஆக இருந்ததுடன் பட்டோலைகளுக்கு இணங்க மீதி ரூபா 52,773,713 ஆக இருந்ததனால் ரூபா 2,435,941 வித்தியாசமாகும்.	2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும	கணக்கீட்டு பிழைகளை எதிர்வரும் காலங்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நகரசபையின் வங்கி கணக்கின் மீதி ரூபா 10,057,214 ஆக இருந்ததுடன் வங்கி மீதியினை உறுதிப்படுத்தும் கடிதத்தின் பிரகாரம் மீதி ரூபா 19,018,434 ஆக இருந்ததனால் ரூபா 8,961,220 வித்தியாசமாகும்.	-மேற்படி-	-மேற்படி-

1.7 இணக்கமின்மைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மைகள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2020/01 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 9.1(ஆ) பந்தி	15 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 140,000 முற்பணங்களை தீர்த்துவைப்பதற்காக 16 நாட்களுக்கும் 55 நாட்களுக்கும் இடைப்பட்ட கால தாமதம் ஏற்பட்டிருந்தது.	மேல் மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான மாகாண நிதி விதி தொடர்புபடுத்தப்படுவதுடன் அதன் 261.2(எ) பிரிவின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னைய முற்பணங்கள் அனைத்தும் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன	குறித்த செயலுக்கான உப கட்டு நிதியானது செயற்பாடு முடிவடைந்த உடன் தீர்த்து வைப்படுதல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 3,027,688 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 15,143,714 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீடு செய்த வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

		2024				2023			
	வருமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம	திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை
		ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000
i)	வீத வரியும் வரியும்	36,918	35,218	25,003	10,215	32,285	33,816	21,243	12,573
ii)	வாடகை	48,509	49,018	46,619	2,399	56,454	41,882	37,640	4,242
iii)	அனுமதிப்பத்திர கட்டணம்	1,305	656	656	0	1,297	567	567	0
iv)	ஏனைய வருமானம்	103,060	42,399	40,864	1,535	46,620	34,710	16,736	17,974
		189,792	127,291	113,142	14,149	136,656	110,975	76,186	34,789

2.2.2 வருமானத்தை சேகரிக்கும் செயலாற்றல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட வீதவரி வருமானம் ரூபா 35,217,992 ஆக இருந்த போதிலும் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வீதவரி வருமானம் ரூபா 25,003,420 ஆக இருப்பதனால் இன்னும் சேகரிக்கப்பட வேண்டிய நிலுவை வீதவரி வருமானம் ரூபா 10,214,572 என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.	2024 ஆம் ஆண்டிற்கான இறுதி 02 காலாண்டுகளில் வருமானப் பிரிவிலுள்ள அனைத்து உத்தியோகத்ரத்களும் மதிப்பீட்டு திருத்த நடவடிக்கைகளுக்காக பங்கு பற்றியிருந்ததனால் இப்பணத்தை அறவீடு செய்வது சிக்கலாக இருந்தது. தற்பொழுது இந்த நிலுவையான வீதவரி பணத்தை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் 2025 சனவரி	நிலுவையான வாடகை வருமானத்தை முறைப்படியாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		01 ஆந் திகதியிலிருந்து 2025 மார்ச் 31 ஆந் திகதி வரை அறவீடு செய்ய வேண்டியுள்ள நிலுவையான வீத வரிப் பணம் ரூபா 4,710,905 ஆகும்.	
(ஆ)	மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட வாடகை வருமானம் ரூபா 49,018,032 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அதில் சேகரிக்கப்பட்ட வாடகை வருமானம் ரூபா 46,618,940 ஆக இருந்ததனால் இனனும் சேகரிக்கப்பட வேண்டிய வாடகை வருமானம் ரூபா 2,399,093 ஆகும்.	2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலுவையான வாடகை வருமானத்தை சேகரிப்பதற்கான அறிவித்தலினை அனுப்பி மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.	நிலுவையான வாடகை வருமானத்தை முறைப்படியாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயறதிறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	1916 ஆம் ஆண்டளவிலிருந்து நகரசபையினால் பராமரிக்கப்படுகின்ற குளத்து காடுகளின் உறுதியான அளவினை காட்ட முடியாத நிலத்தை 2025 பெப்ரவரி மாதமளவில் சபையினால் பொறுப்பேற்க முடியாதிருந்தது. இதன் காரணமாக உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசங்களில் சுற்றுலா உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக மாகாண சபை நிதி ஏற்பாட்டின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 10 மில்லியன் செயற்திட்டத்தினை அங்கீகரித்து அமுல்ப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.	2019 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை இக்குளத்து காட்டு காணியின் உரிமையாண்மையினை பெற்றுக்கொள்ளும் குறிக்கோளில் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களுக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது டன் விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களின் குறிப்புக்கு இணங்க குளத்தின் காடுகளில் வனாந்திரத்திற்குரிய நிலத்தின் அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உச்ச அளவாக 10 ஏக்கர்களுக்கு உட்பட்ட நிலப்பகுதி குத்தகை அடிப்படையில் சீதாவகபுர நகர சபைக்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	குளத்து காட்டு நிலத்தின் அளவினை நிரந்தரமாக அடையாளங்கண்டு உரிமையை நகர சபையினால் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2024 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட விளம்பர	உரிய விளம்பர பலகைகள் 2024 ஆம் ஆண்டின் இறுதி	ஒவ்வொரு ஆண்டிலும் விளம்பர பலகைகளை

பலகை மீளாய்வின் போது 181 விளரம்பர பலகைகள் அடையாளங்காணப்பட்டிருந்தும் அதில் உள்ளடக்கப்படாத நகர சபை எல்லைக்கு 02 கிலோ மீற்றர் அளவான துாரத்திற்குள் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாது காட்சிப்படுத்தப்பட்டிருந்த 24 விளம்பர பலகைகள் பௌதீக பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டதுடன் அப்பலகைகளின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 385,200 ஆகும்.	காலாண்டின் போதும் 2025 ஆம் ஆண்டின் தொடக்க காலாண்டின் போதும் ஸ்தாபிக்கப்பட்டவையாகும். அதன் போது செலுத்த வேண்டிய விளம்பர கட்டணத்தை 2025 ஏப்ரல் மாதம் முடிவடைவதற்கு முன்னர் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மீளாய்வு செய்து வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
சபையின் அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை 175 ஆக இருந்தததுடன் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 179 ஆகும். அவற்றில் 22 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் ஆரம்ப தரத்திலுள்ள 19 உத்தியோகத்தர்களினதும் இரண்டாம் தரத்திலுள்ள 10 உத்தியோகத்தர்களினதும் மிகைகள் காணப்பட்டன.	சபையின் அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை 175 ஆனதுடன் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 180 ஆகும். 2025.03.31 ஆந் திகதியளவில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 21 ஆகும். இரண்டாம் தரத்திலுள்ள 10 உத்தியோகத்தர்களினதும் ஆரம்ப தரத்திலுள்ள 19 உத்தியோகத்தர்களினதும் மிகை காணப்பட்டது.	வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிகதை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	ஒரு நிறுவனமாக பொதுமக்களின் முறைப்பாடுகளுக்கு தலையீடு செய்தலினை நாளாந்த இலக்காக கொண்டிருந்தும் பௌதீக செயல்முன்னேற்றம் ஆண்டிற்கு 64 முறைப்பாடுகள் மாத்திரமாகும்.	ஆபத்தான மரங்கள் சம்பந்தமான 38 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன் அந்த எண்ணிக்கை இதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	பொது மக்களின் முறைப்பாடுகளுக்குரிய பௌதீக செயல் முன்னேற்றத்தை அதிகரிக்கச் செய்தல் வேண்டும்.
(ஆ)	ஆளணியினர் கூட்டங்கள் ஒரு ஆண்டிற்கு 08 இனை நடாத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்தும் பௌதீக	இந்த ஆண்டின் போது நிர்ணயிக்கப்பட்டவாறு ஆளணியினர் கூட்டங்களை	நிர்ணயிக்கப்பட்டவாறு ஆளணியினர் கூட்டங்களை நடாத்துவதற்கு

செயல் முன்னேற்றம் 03 ஆக இருந்ததனால் செயலாற்றல் மிகவும் குறைவு மட்டத்தில் காணப்பட்டது.	நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 பாதீட்டு கட்டுப்பாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	வறுமை நிவாரண கொடுப்பனவுகள் - கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஆடைகள் வழங்குவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டு பணத்தில் ரூபா 360,050 அல்லது 72 சதவீதம் அளவானவை பயன்படுத்தப்படாது மிகுதியாக காணப்பட்டது.	மிகுதியாக உள்ள நிதி ஏற்பாட்டிற்காக விண்ணப்ப பத்திரங்கள் தற்பொழுது கிடைத்துள்ளதனால் அந்த நடவடிக்கைகளுக்காக கடன்கொடுத்தோர்களுக் காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.	நிதி ஏற்பாட்டினை உரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	புதிய வியாபார கட்டிட தொகுதியின் மேல் மாடியில் கடைகளை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டுப் பணம் ரூபா 38,600,000 ஆக இருந்ததுடன் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முழுச் சொத்துக்கள் ரூபா 3,195,415 ஆக இருந்ததனால் நிதி ஏற்பாட்டினை பயன்படுத்துதல் 8.3 சதவீதம் மாத்திரமாகும்.	2024 ஆம் ஆண்டில் அந்த நடவடிக்கை முடிவடைந்திருக்காததன ால் நிர்மா நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை ல.	முறையாக ஆய்வு செய்ததன் பின்னர் நிதி ஏற்பாட்டினை சேகரித்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.